இணைப்பு. 1

**உள்ளூர் தாய் சேய் நலன் /கர்ப்பத்தின் முன் பராமரிப்பு பிணியாய்வு நிலையங்களிலிருந்து, போஷணைச் சிகிச்சை நிலையத்திற்கு மேலதிக கவனிப்புக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போஷணைக் குறைபாடுகள்**

## 1.1 குழந்தைகளும் 1-5 வயதுடைய பிள்ளைகளும்

வெளிக்கள சுகாதாரப் பராமரிப்பு பணியாளர்களால் உள்ளூர் தாய் சேய் நலன் /கர்ப்பத்தின் முன் பராமரிப்பு பிணியாய்வு நிலையங்களுக்கு மேலதிக கவனிப்புக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டிய போஷணைக் குறைபாடுகள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன. **இந்த மட்டத்தில் பிள்ளையொன்றின் போஷணைக் குறைபாட்டை கையாள்வது சிரமமாயிருப்பின் அல்லது முன்னேற்ற முடியாமல் போகுமாயின் மட்டுமே போஷணைச் சிகிச்சை நியைத்திற்கு மேலதிக கவனிப்புக்காக அனுப்பி வைக்கப்பட வேண்டும்**

| | **பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின்படி (CHDR) வளர்ச்சி வலயம்** | **பிரச்சனை** |
|---|---|---|
| 1. | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் வயதுக்குரிய நிறை குறிப்பேட்டில் +2 SD க்கும் -1SD க்கும் இடைப்பட்ட வலயத்தில் (பச்சை வலயம்) வளர்ச்சிப்படிநிலை காணப்படும் பிள்ளைகள் | • நிறையில் ஒரு **வீழ்ச்சி** கண்டுபிடிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம்*<br>• வயதுக்குரிய நிறை வரைபு பச்சை வலயத்திலிருந்து இளம் பச்சை வலயம்/செம்மஞ்சள் வலயத்திற்கு விலகுதல்<br>• ஒரு குழந்தையின் வளர்ச்சி வரைபு, நியம வரைபுகளுக்கு சமாந்தரமாக சென்ற போதும் முன்னர் பச்சை வலயத்தின் மேற்பகுதியிலிருந்த அக்குழந்தையின் வயதுக்குரிய நிறை வரைபானது வீழ்ச்சியடைந்து தற்போது முன்னைவிட கீழ்மட்டத்தில் காணப்படல்<br>• நீண்டகாலமாக நிறை வீழ்ச்சி காணப்படல் (தொடர்ச்சியான 3 நிறை பார்த்தலில்)(உ+ம்-வேறு பகுதியிலிருந்து வந்த பிள்ளைகள்) *<br>• நிறை வீழ்ச்சிக்கு பின்னணிக் காரணங்களாக ஏதாவது சுகவீனங்கள்/ சுக நலப்பிரச்சனைகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் சந்தர்ப்பம்<br>• பொது சுகாதார மருத்துவமாது நிறை வீழ்ச்சிக்கான காரணத்தை கண்டுபிடிக்க முடியதாதிருத்தல்<br>• பொது சுகாதார மருத்துவமாது அப்பிரச்சனையை சமாளிக்க இயலாதென உணரும் சந்தர்ப்பம்<br>• ஒரு மாதகால தலையீட்டுச் செயற்பாடுகளின் (interventions) பின்னரும் நிறையில் முன்னேற்றம் காணப்படாதிருத்தல்<br>• வயதுக்குரிய நிறை வரைபு சிறுகால இடைவெளியில் செங்குத்தாக உயர்ந்து நியம வளர்ச்சி வரைபுகளை வெட்டிச் செல்லல் (சாதாரண வளர்ச்சியுடைய பிள்ளைகளில்)** |
| 2 | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் வயதுக்குரிய நிறைக் குறிப்பேட்டில் -1 SD க்கும் -2 SD க்கும் இடைப்பட்ட | • நிறையில் ஒரு **வீழ்ச்சி** காணப்பட்ட முதல் சந்தர்ப்பம் *<br>• வயதுக்குரிய நிறை வரைபு இளம்பச்சை வலயத்திலிருந்து செம்மஞ்சள் வலயத்திற்கு விலகுதல்<br>• வயதுக்குரிய நிறை வரைபானது இளம் பச்சை வலயத்தில் இருக்கும்போது பிள்ளையொன்றுக்கு குறைவான நிறையதிகரிப்புடன் |

| | | |
|---|---|---|
| | வலயத்தில் (இளம் பச்சை வலயம்) வளர்ச்சிப் படிநிலை காணப்படும் பிள்ளைகள் | அல்லது நிறையே அதிகரிக்காத நிலையில் ஏற்படும் வளர்ச்சிக் குறைபாடு<br>• ஒரு குழந்தையின் வளர்ச்சி வரைபு நியம வரைபுகளுக்கு சமாந்தரமாக சென்றபோதும் அது இளம் பச்சைவலயத்தின் மேற்பகுதியில் இருந்து விலகி தற்போது முன்னிருந்ததிலும் கீழ்மட்டத்தில் காணப்படல்<br>• நிறை வீழ்ச்சி நீண்ட காலமாயிருத்தல் (தொடர்ச்சியான 3 நிறைபார்த்தலில்) (உூம்: வேறு பகுதியிலிருந்து வந்த பிள்ளைகள்)<br>• நிறை வீழ்ச்சிக்கு பின்னணிக் காரணங்களாக ஏதாவது சுகவீனங்கள் சுகநலப்பிரச்சனைகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கும் சந்தர்ப்பம்.<br>• பொ.சு.மருத்துவமாது நிறை வீழ்ச்சிக்கான காரணத்தைக் கண்டுபிடிக்க முடியதாதிருத்தல்.<br>• பொ.சு.மருத்துவமாது அப்பிரச்சனையை சமாளிக்க இயலாதென உணரும் சந்தர்ப்பம்.<br>• ஒருமாதகால தயைீட்டுசெயற்பாடுகளின் (interventions) பின்னரும் நிறையில் முன்னேற்றம் காணப்படாதிருத்தல்.<br>• வயதுக்குரிய நிறை வரைபு சிறுகால இடைவெளியில் செங்குத்தாக உயர்ந்து நியம வளர்ச்சி வரைபுகளை வெட்டிச் செல்லல். (சாதாரண வளர்ச்சியுடைய பிள்ளைகளில்) ** |
| 3 | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் வயதுக்குரிய நிறைக்குறிப்பேட்டில் -2 SD க்கு கீழ்ப்பட்ட வலயத்தில்(செம்மஞ்சள் / சிவப்பு வலயம்) வளர்ச்சிப் படிநிலை காணப்படும் பிள்ளைகள் | • முதற் பார்வையிலேயே இந்தப் பிள்ளைகள் (உூம்: பிறப்புநிறை குறைந்த குழந்தைகள், வேறு பகுதியிலிருந்து வந்த நிறை குறைவான பிள்ளைகள்) ஒரு வளர்ச்சிக் கணிப்பீட்டிற்காக சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடம் அனுப்பப்பட வேண்டும்.<br>• செம்மஞ்சள் /சிவப்பு வலயத்தில் வளர்ச்சிப் படிநிலை காணப்படும் பிள்ளைகளின் வளர்ச்சியில் வீழ்ச்சி ஏற்படுமாயின் அதை அவசர நிலையாக கருதி உடனே கவனிப்புக்கு அனுப்பி வைக்க வேண்டும்.<br>• சாதாரண வளர்ச்சியுடைய பிள்ளைகளில் வயதுக்குரிய நிறை வரைபு சிறுகால இடைவெளியில் செங்குத்தாக உயர்ந்து நியம வளர்ச்சி வரைபுகளை வெட்டிச் செல்லல். |
| 4 | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் வயதுக்குரிய நிறைக்குறிப்பேட்டில; +2 SD க்கு மேற்பட்ட வலயத்தில் (ஊதா வலயம்) வளர்ச்சிப் படிநிலை காணப்படும் பிள்ளைகள் | • முதற் பார்வையிலேயே ஊதா வலயத்தில் வளர்ச்சிப் படிநிலை காணப்படும் பிள்ளைகள் அனைவரும் மேலதிக கவனிப்புக்காக உடனடியாக அனுப்பிவைக்கப்பட வேண்டும் |
| 5 | வயதுக்குரிய நீளம் /உயரம் காட்டும் வரைபு | • வயதுக்குரிய நீளம் /உயரம் காட்டும் வரைபு செம்மஞ்சள் / சிவப்பு வலயத்தில் இருக்கும் பிள்ளைகள்<br>• வயதுக்குரிய நீளம் /உயரம் காட்டும் வரைபு நியம வரைபுகளுடன் சமாந்தரமாக வளர்ந்து செல்லாத நிலை (உயரம் போதாமை/ஒருபோதும் உயராமை/செங்குத்தாக உயரும் வரைபு) |
| 6 | உயரத்துக்குரிய நிறைக்குறிப்பேட்டின் வரைபில்-2ளுனுக்கு கீழ்நிலையில் காணப்படும் | • சாதாரண உடல்மெலிவு சாதாரண சடுதியான போஷாக்கின்மை (செம்மஞ்சள் வலயம்: -2 SD க்கும் -3 SD க்கும் இடையில்)<br>• தீவிர உடல்மெலிவு /தீவிர சடுதியான போஷாக்கின்மை (சிவப்பு வலயம் -3SD க்கு கீழ்.) இந்தப் பிள்ளைகள் உடனடியாக உள்ளுர் |

| | | |
|---|---|---|
| | பிள்ளைகள் | தாய் சேய் நலன்பேண் சிகிச்சை நிலைய வைத்திய உத்தியோகத்தரால் போஷணைச்சிகிச்சை வழங்குவதற்காக குழந்தை வைத்திய நிபுணரிடம் அனுப்பி வைக்கப்படல்வேண்டும் |
| 7 | உயரத்துக்குரிய நிறைக்குறிப்பேட்டின் வரைபில் +1SD க்கு மேலாக காணப்படும் பிள்ளைகள் | • அதிக எடை ஏற்படக்கூடிய ஆபத்து (+1SD க்கும் +2SD க்கும் இடையில' )<br>• அதிக எடை(> +2SD)<br>• அளவுக்கதிக உடற் பருமன் (>+3SD ) - இந்தப்பிள்ளைகள், உள்ளூர் தாய்சேய் நலன்பேண் சிகிச்சை நிலையத்திலிருக்கும் சுகாதார வைத்திய உத்தியோகத்தரால் ,உடனடியாக குழந்தை வைத்திய நிபுணரிடம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும் |
| 8 | | • நுண் போஷணைப் பதார்த்தங்கள் குறைபாடு எனச் சந்தேகிக்கப்-படும்போது (உம்: உயிர்ச்சத்து A குறைபாடு ,இரத்தச்சோகை) |

* இந்தச் பிள்ளைகளின் நீளம்/உயரத்துக்குரிய நிறை சரிபார்க்கப்பட்டு இவ்வட்டவணையின் 06 இல் காட்டியவாறு செய்யவும்

** இந்தப் பிள்ளைகளின் நீளம் உயரத்துக்குரிய நிறை சரிபார்க்கப்பட்டு இவ்வட்டவணையின் 07 இல் காட்டியவாறு செய்யப்பட வேண்டும். நோய் குணமானவுடயான காலத்தில் குறைநிரப்பு வகையில் வேகமான வளர்ச்சியைக் காட்டும் பிள்ளைகள் இந்த வகையினருடன் சேர்க்கப்படவில்லை.அவர்களை கவனிப்புக்காக அனுப்பும் தேவை இல்லை.

நீளம் / உயரத்துக்குரிய நிறை கணிப்பிடவேண்டிய சந்தர்ப்பங்கள்

1. முதன்முதல் வயதுக்குரிய நிறை வரைபில் ஒரு வீழ்ச்சி அடையாளம் காணப்பட்டபோது.
2. 3 தொடர்ச்சியான நிறை பார்த்தலில் நிறையேற்றம் போதாமை அல்லது நிறையேற்றம் இன்மை
3. சாதாரண மற்றும் தீவிர நிறைக்குறைபாடு (வயதுக்குரிய நிறை -2SD க்கு கீழ் வரும் எல்லாப் பிள்ளைகளும்)
4. ‘அதிக எடை’ - வயதுக்குரிய நிறை +2SD க்கு மேல் வரும் பிள்ளைகள்

## 1.2 பாடசாலை மாணவர்கள்

பாடசாலை மாணவர்களில் உடற் திணிவுச் சுட்டி (BMI) 30 க்கு மேலாக இருப்பவர்களும் 17 க்கு குறைவாக இருப்பவர்களும் தீவிர இரத்தச்சோகை உள்ளவர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களும் ஒரு வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு விசேட கவனிப்புக்காக அனுப்பி வைப்பதற்காக அண்மைத் திகதியில் நடக்கவுள்ள ஏதாவதொரு சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

| | வளர்ச்சி வலயம் | பிரச்சனை |
|---|---|---|
| **1** | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் 5-19 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின், வயதுக்குரிய உடற் திணிவுச் சுட்டி வரைபின் -2SD கீழ் (செம்மஞ்சள்/ சிவப்பு) வளர்ச்சிப்படிநிலையில் உள்ள பிள்ளைகள் | உடல்மெலிவு(Wasting)– தலையீட்டு செயற்பாடுகளின் 3 மாதத்தின் பின்னரும் முன்னேற்றம் காணப் படாதிருப்பின் |
| **2** | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் 5-19 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின், வயதுக்குரிய உடற் திணிவுச் சுட்டிவரைபின் **+1SD** க்கும் + 2SD க்கும் இடையில் (இளம் ஊதா வலயம்) வளர்ச்சிப்படிநிலையில் உள்ள பிள்ளைகள் | அதிக எடை (Overweight)- தலையீட்டு செயற்பாடுகளின் 3 மாதத்தின் பின்னரும் முன்னேற்றம் காணப்படாதிருப்பின் |
| **3** | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் 5-19 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் வயதுக்குரிய உடற் திணிவுச் சுட்டி வரைபின் + 2SD க்கும் மேல் (கடும் ஊதா வலயம்) வளர்ச்சிப்படிநிலையில் உள்ள பிள்ளைகள் | அளவுக்கதிக உடற்பருமன்(Obeysity)- தலையீட்டு செயற்பாடுகளின் 3 மாதத்தின் பின்னரும் முன்னேற்றம் காணப்படாதிருப்பின் |

| | | |
|---|---|---|
| 4 | | பிணியாய்வின் போது கண்டுபிடிக்கப்படும் இரத்தச்சோகை - உடனடியாக முழுமையான குருதி பரிசோதனை அறிக்கையுடன் (Full Blood Count Report) சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் |
| 5 | | வேறு நுண் போஷணைப்பதார்த்த குறைபாடுகள் - ஏதாவது இருக்கலாமென சந்தேகிக்கப்படின் (உம்:- உயிர்ச்சத்து ஏ, தைபோயிட் வீக்கம்) |

1.3 **வயது 5 - 19 க்கு இடைப்பட்ட பாடசாலை செல்லாத பிள்ளைகள்**

உடற் திணிவுச் சுட்டி (BMI) 30 க்கு மேலாக இருப்பவர்களும் 17க்கு குறைவாக இருப்பவர்களும் ˙தீவிர இரத்தச்சோகையுள்ளவர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களும் ஒரு வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டு மேலதிக கவனிப்புக்காக விசேட வைத்திய நிபுணரிடம் அனுப்பி வைப்பதற்காக ,அண்மைத் திகதியில் நடக்கவுள்ள ஏதாவதொரு சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

| | வளர்ச்சி வலயம் | பிரச்சனை |
|---|---|---|
| 1 | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் 5-19 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் வயதுக்குரிய உடற் திணிவுச் சுட்டி வரைபின் -2 SD க்கு கீழ் (செம்மஞ்சள்/சிவப்பு) வளர்ச்சிப் ˙படிநிலையில் உள்ள பிள்ளைகள்) | உடல் மெலிவு (Wasting)– பிரச்சனையை அடையாளம் கண்டவுடனேயே இந்தப் பிள்ளைகள் வளர்ச்சி கணிப்பீட்டுக்காக சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் |
| 2 | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின ˙5-19 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளுக்கான உடற் திணிவுச் சுட்டி வரைபின் + 1SD க்கும் + 2SD க்கும் இடையில் (இளம் ஊதா வலயம்) வளர்ச்சிப்படிநிலையில் உள்ள பிள்ளைகள் | அதிக எடை (Overweight)-பிரச்சனையை அடையாளம் கண்டவுடனேயே இந்தப் பிள்ளைகள் வளர்ச்சி கணிப்பீட்டுக்காக சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் |
| 3 | பிள்ளையின் ஆரோக்கிய வளர்ச்சிப் பதிவேட்டின் ˙5-19 வயதுக்கு இடைப்பட்ட பிள்ளைகளின் வயதுக்கான உடற் திணிவுச் சுட்டி வரைபின் + 2SD க்கும் மேல் (கடும் ஊதா வலயம்) வளர்ச்சிப் ˙படிநிலையில் உள்ள பிள்ளைகள் | அளவுக்கதிக உடற் பருமன் (Obesity)- பிரச்சனையை அடையாளம் கண்டவுடனேயே இந்தப் பிள்ளைகள் வளர்ச்சி கணிப்பீட்டுக்காக சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும் |
| 4 | | பிணியாய்வின்போது கண்டுபிடிக்கப்படும் இரத்தச்சோகை- முழுமையான குருதிப் பரிசோதனை அறிக்கையுடன் (Full Blood Count Report) உடனடியாக சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் |
| 5 | | வேறு நுண் போஷணைப்பதார்த்த குறைபாடுகள்-ஏதாவது இருக்கலாமென சந்தேகிக்கப்படின்(உயிர்ச்சத்து A **அல்லது B** குறைபாடு, தைபோயிட் வீக்கம்) |

### 1.4 கர்ப்பத்திற்கு முன்னரான பெண்கள் (Pre Pregnant Women)

| | உடற் திணிவுச் சுட்டி (BMI) | பிரச்சனை |
|---|---|---|
| 1 | கர்ப்பத்திற்கு முன்னர் உடற் திணிவுச் சுட்டி 18.5 க்கு குறைவாகவோ அல்லது 30 க்கு மேலாகவோ காணப்படும் பெண்கள் | கர்ப்பத்தின் முன்னரான சிகிச்சை நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட தலையீட்டு செயற்பாடுகளின் பின்னரும் திருப்திகரமான முன்னேற்றம் காணப்படாத பெண்கள் |
| 2 | | குணமாக்கப்படாத குருதிச்சோகை |
| 3 | | வேறு நுண்போஷணைப் பதார்த்தக் குறைபாடு இருக்கலாமென சந்தேகிக்கப்படுமிடத்து (உம்- உயிர்ச்சத்து A, B குறைபாடுகள், தைபோயிட் வீக்கம்) |

### 1.5 கர்ப்பிணிப் பெண்களும் பாலூட்டும் தாய்மாரும்

| | உ.டற் திணிவுச் சுட்டி /நிறையேற்றம் | பிரச்சனை |
|---|---|---|
| 1 | கர்ப்பிணிப்பெண்களின் உடற் திணிவுச் சுட்டி 18.5 க்கு குறைவாகவோ அல்லது 30 க்கு மேலாகவோ காணப்படும்போது | உள்ளுர் தாய் சேய் நலன்பேண் சிகிச்சை நிலையதிலும் வெளிக்களத்திலும் செய்யப்பட்ட தலையீட்டு செயற்பாடுகளின் பின்னரும் திருப்பிகரமான முன்னேற்றம் காணப்படாத பெண்கள் |
| 2 | கர்ப்பகாலத்தின் போது திருப்தியற்ற நிறையேற்றத்தைப் பெற்ற கர்ப்பிணிப் பெண்கள் | • உடற் திணிவுச் சுட்டியின்படி வேண்டப்படும் நிறையேற்றத்தைப் பெறாத கர்ப்பிணிப் பெண்கள்<br>• நிறையேற்ற வரைபு உரிய வலயத்திலிருந்து அடுத்த வலயத்திற்கு விலகும் (மேல் அல்லது கீழ் வலயம்) கர்ப்பிணிப் பெண்கள்<br>• 18.5க்கு கீழ் உடற் திணிவுச் சுட்டி காணப்படும் பாலூட்டும் தாய்மார் |
| 3 | | குணப்படுத்தபடாத இரத்தச்சோகை |
| 4 | | வேறு நுண்போஷணைப் பதார்த்தக் குறைபாடு இருக்கலாமென சந்தேகிக்கப்படுமிடத்து (உம்- உயிர்ச்சத்து A, B குறைபாடுகள், தைரோயிட் வீக்கம்) |